**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.451 நாள்: 07.09.2026

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.06.2026) வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, அடையாறு மண்டலம், வார்டு-178க்குட்பட்ட தரமணி பகுதியில் ஓ.எம்.ஆர். சாலை மற்றும் எம்.ஆர்.டி.எஸ். அருகில் மழைநீர் வடிகால் இணைப்புப் பணிகள் மேற்கொள்வது குறித்து காவல்துறை உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்களுடன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, மேற்பார்வை பொறியாளர் திரு.முரளி, மண்டல அலுவலர் திரு.என்.காளிதாஸ் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**